**வேலூர் விற்பனைக்குழு செயலாளர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்:– திரு.எஸ்.விஸ்வநாதன், பிஎஸ்சி(விவ),**

ந.க.எண்:ஆ/4766/2016 நாள்:28.02.2019

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.ஆர்.பாபுஜி, இளநிலை உதவியாளர் அவர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணைப்பிறப்பித்தல் – சார்பாக.

பார்வை: 1.இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்–ஆ/4766/2016, நாள்–17.04.2017.
2.திரு.ஆர்.பாபுஜி, இளநிலை உதவியாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், ஆற்காடு அவர்களது கடிதம் நாள்– 19.04.2017,

####

ஆணை:–

பார்வை 1–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.ஆர்.பாபுஜி, அவர்களுக்கு நடைமுறை அரசாணைகள் மற்றும் விதிகளுக்குட்பட்டு தற்காலிக அடிப்படையில் அலுவலக உதவியாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. பார்வை 2–ல் காணும் கடிதத்தின் மூலம் அன்னார் 19.04.2017 அன்று வேலூர் விற்பனைக்குழுவின் வாணியம்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூட இளநிலை உதவியாளராக பணியில் இணைந்ததை தொடர்ந்து அன்னாரது பணியினை அவர் பணியில் இணைந்த நாளிலிருந்து கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்தும், இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.பாபுஜி<br>இளநிலை உதவியாளர்,<br>ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்,<br>வாணியம்பாடி. | 19.04.2017 மு.ப | 19.04.2017 மு.ப |

மேற்படி தகுதிகாண் பருவகாலத்தில் இவர் கீழ்க்காணும் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

1. வேளாண்மை விற்பனைத் துறை தேர்வு
2. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
3. அரசு அலுவலர்களுக்கான பவானி சாகர் அடிப்படை பயிற்சி.

மேறபடி விவரம் பணியாளரது பணிப்பதிவேடு தொகுதி–II பக்கம் எண் 70–ல் பதியப்பட்டு சான்றிடப்பட்டுள்ளது. இப்பணிவரன்முறை செய்த ஆணையினைப் பெற்றுக் கொண்டமைக்கான உரிய ஒப்புதலை தலைமையலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

28/2/19

செயலாளர்,
வேலூர் விற்பனைக்குழு, வேலூர்.

28/2/19

பெறுநர்:–
சம்பந்தப்பட்ட பணியாளர்(உரிய வழிமுறையாக).
நகல்:– 1. கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், வாணியம்பாடி.
2. இளநிலை உதவியாளர் `ஆ2` பிரிவு (2)
3.மேற்பார்வையாளர் ஆ பணிப்பதிவேடு
இருப்பு கோப்பு–1